## பிரிவு – 8

### கடன் பணிகளும் பொறுப்புகளும்

**2.8.1.** வருவாய்க் கணக்கிலான வரவுகள், செலவுகள் பற்றிய பகுப்பாய்வு செய்ததில் பெரும்பாலான உள்ளாட்சி மன்றங்களில் ஓரளவு உபரி நிலையே நிலவுகிறது என்பது தெரிய வருகிறது. ஆனால் இது உண்மையான உபரி நிலை அல்ல.

**2.8.2.** கிடைக்கப்பெறும் தொகைகளுக்கேற்ப செலவு செய்யப்படுகிறது. இது, உண்மையில் தேவைப்படும் ஒதுக்கீட்டைக் காட்டுவதில்லை. நிதி நிலையிலுள்ள பற்றாக்குறை காரணமாக, கடன் பணிகள் ஓய்வூதியத் தொகைக்கு செலுத்தத்தக்க பங்குத் தொகை தொடர்பான நிதி ஒதுக்கீட்டில் பற்றாக்குறை காணப்படுவது சர்வ சாதாரணமாகும்.

**2.8.3.** கடன் தீர்வு ஒரு முக்கியப் பிரச்சினையாகும். உள்ளாட்சி மன்றங்களின் வலுவான நிதி நிலையை உறுதி செய்வதற்கு, நிதி நிலையை நன்கு புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். பொறுப்புகள் வளர்ந்து வருவது தொடர்ந்து அனுமதிக்கப்படுமாயின், நிதி ஆதாரங்களை மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போகும். அதே நேரத்தில், கிடைக்கின்ற கூடுதல் வருவாய் கடன் பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கே பயன்படுத்தப்பட்டால், உள்ளாட்சி மன்றங்களின் முக்கியப் பணிகளின் மேம்பாடு தடைபட்டுப் போகும். கடன் நிலை, பல ஆண்டுகளாக வளர்ந்து வந்த ஒன்றாகும். 31.3.94 ஆம் நாளன்றுள்ளபடி பல்வேறு நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் வளர்ந்து வந்துள்ள கடன் நிலைமை பற்றிய விவரம், கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.65. I. உள்ளாட்சி மன்றங்களின் கடன்கள்: (ரூபாய் கோடியில்)

| நிறுவனத்தின் பெயர் | காலங்கடந்து நிலுவையாகவுள்ள ஆண்டுத் தொகை | | தண்ட வட்டி | நடப்பு ஆண்டுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | அசல் | வட்டி | | | |
| மாநகராட்சிகள் | 127.86 | 25.89 | 0.02 | 8.10 | 161.87 |
| நகராட்சிகள் | 38.89 | 53.82 | 1.16 | 20.64 | 114.51 |
| பேரூராட்சிகள் | 20.96 | 23.39 | 0.26 | 3.30 | 47.91 |
| மொத்தம் | 187.71 | 103.10 | 1.44 | 32.04 | 324.29 |

அட்டவணை 2.66 II. வழி வகை முன் பணங்கள் (ரூபாய் கோடியில்)

| நிறுவனம் | காலங்கடந்து நிலுவையாகவுள்ள | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | தொகை | வட்டி | நடப்பு பாக்கி | |
| மாநகராட்சிகள் | 0.38 | 0.37 | -- | 0.75 |
| நகராட்சிகள் | 5.77 | 4.33 | 3.19 | 13.29 |
| பேரூராட்சிகள் | 3.96 | 4.65 | 0.53 | 9.14 |
| மொத்தம் | 10.11 | 9.35 | 3.72 | 23.18 |

**2.8.4.** கடன் நிலை, பெரும்பாலும், குடிநீர் வழங்கும் திட்டங்களுக்குரிய கடன் தொடர்பானதாகும். இக்கடன்கள் 15 ஆண்டு கால அளவில் திருப்பிச் செலுத்தத் தக்கதாகும், அதற்கிணங்க ஆண்டுத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. மேற்சொன்ன விவர அட்டவணையிலிருந்து இதைக் காணலாம். அசலைக் காட்டிலும், வட்டி பொறுப்பு அதிகமாக உள்ளது.

**2.8.5.** வட்டிப் பொறுப்பு சேர்ந்து வந்ததற்கான காரணங்கள் பின்வருமாறு:

(i) பல இனங்களில் திட்டங்கள் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை; காலங்கடந்ததன் காரணமாக பண வீக்க வகையிலான உயர்வைக் காட்டிலும், அதிக அளவில் செலவு ஏற்பட்டிருப்பதே இதற்கு சாட்சியாகும். தொழில் நுட்ப திருத்த மதிப்பீடுகளில் உள்ளாட்சிகளின் பங்கு ஏதும் இல்லை.

(ii) திட்டங்களைச் செயற்படுத்த, வரையறுத்த கால அளவை விடவும் கூடுதலாக அவகாசம் எடுத்துக் கொள்வது அதிகமாகக் காணவருகிறது. (ஆறு ஆண்டு முதல் ஏழு ஆண்டுகள் வரையிலும் அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.) இந்த வகையில் உள்ளாட்சி மன்றங்கள் சரியான கட்டுப்பாடு செலுத்த இயலவில்லை அதில் அதன் பங்கு எதுவுமில்லை.

(iii) அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கு கடன் தவணை முதலில் சிறிது காலத்திற்கு ஒத்தி வைப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் கடன் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து வட்டி செலுத்தும் பொறுப்பு தொடங்கி விடுகிறது இத்திட்டங்களின் பயன்களை உள்ளாட்சி மன்றங்கள் அடைவதற்கு முன்னரே, உள்ளாட்சி நிதிகளிலிருந்து வட்டித் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது. திட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்புகள், அரசிடமிருந்து நேரடியாக அசல் தொகையைப் பெற்றுக் கொள்கின்றன. இந்த அசல் தொகைக்கு வட்டித் தொகை பெறக்கூட உள்ளாட்சி மன்றங்களுக்கு வாய்ப்பில்லை. உரிய நாளில் வட்டித் தொகையை செலுத்தாதது, வேண்டுமென்றே செய்த செயலாக இல்லாதபோதிலும், இதற்காகத் தண்ட வரி விதிக்கப்படுகிறது. இது, ஏற்கெனவே சேர்ந்து வந்துள்ள வட்டிப் பொறுப்போடு சேர்ந்து கூடுதல் பொறுப்பாகிறது.

(iv) உள்ளாட்சி மன்றங்களின் செலுத்தும் திறனைக் கருத்திற்கொண்டு, முழுச் செலவுத் தொகையையும் வசூலிக்க இயலும் வகையில், பயனீட்டாளர் கட்டணங்களை நிர்ணயிக்க இயலவில்லை. குடிநீர் வழங்கும் பணிகளில் குறைபாடுகள் இருப்பதால், தற்போது செயலிலுள்ள வீதங்களின் அடிப்படையில் கூட தொகையை முழுவதுமாக வசூலிக்க இயலவில்லை. திட்டத்தை ஒப்படைத்த பின்னர், பயனீட்டாளர் கட்டணங்களை வசூலிப்பதற்கு கணிசமான கால அளவு பிடிப்பதால் தொகை செலுத்துவதில் மேற்கொண்டும் காலதாமதம் ஏற்படுகிறது.

(v) ஆதாயம் தரத்தக்க பணி இனங்களில், பொதுப் பணித் துறை குறிப்பிடும் வாடகை வீதங்கள் மிகக் குறைவாகவுள்ளன; அதிலும், உயர் நிலை அலுவலர்களின் தலையீடும், கீழ் நிலை அளவிலான கூட்டுச் சதிகளும், குத்தகைத் தொகை அளவை வெகுவாகக் குறைத்து விடுகிறது.

**2.8.6.** குடிநீர் வழங்கும் பணி, தேசிய அளவில் கவனம் செலுத்தப்படும் ஒரு முக்கியப் பணியாகும். அரசுகள் வரையறுத்துள்ள இலக்குகளின்படி, ஒவ்வொரு நபருக்கும் குறைந்த அளவு குடிநீர் வழங்குவதே இதன் நோக்கமாகும். அதிக அளவில் முதலீடு செய்ய வேண்டிய திட்டங்களின் முழுப் பொறுப்பையும், உள்ளாட்சி மன்றங்களால், (அது, ஊரகப்பகுதி உள்ளாட்சி மன்றமாக இருந்தாலும் சரி அல்லது நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றமாக இருந்தாலும் சரி) ஏற்க இயலாது. ஊரகக் குடி நீர் வழங்கும் பணியின் முழுப்பொறுப்பையும் அரசுதான் ஏற்கிறது. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் நேர்வில் கூட, கீழ் நிலைகளிலுள்ள நகராட்சிகளும் பேரூராட்சிகளும் கடனாகவும் மானியமாகவும் அரசிடமிருந்து நிதியுதவி பெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**2.8.7.** அதே நேரத்தில் அதிகச் செலவு செய்து ஏற்கெனவே முடிக்கப்பட்டு குறைந்த வருமானம் ஈட்டித்தரும் திட்டங்களின் நேர்வில், சிறப்பு உதவித் தொகை எதுவும் அளிக்கப்பட்டாலன்றி உள்ளாட்சி மன்றங்களால் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாது. கடன் திருப்பிச் செலுத்தப்படுவதை உறுதி செய்ய, பின்வரும் பரிந்துரைகள் அளிக்கப்படுகின்றன.

1. தவணைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கெடுவைத் திருத்தியமைக்கலாம்.

2. கீழ் நிலைகளைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு, வட்டி வீதத்தை அரசு குறைக்கலாம்.

3. உள்ளாட்சி மன்றங்களுக்கு குறைவான நிதி ஆதாரங்களே இருப்பதையும் வேண்டுமென்றே தொகை செலுத்தாமல் இருக்கவில்லை என்பதையும் கருத்திற் கொண்டு, அபராத வட்டி தொடர்பான விதியை வலியுறுத்தாமல் இருக்கலாம்.

4. கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களைப் பொறுத்தவரை பராமரிப்புச் செலவில் சேர்க்கப்பட்டுள்ள அதிக அளவிலான நிர்வாகச் செலவைத் தவிர்க்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கோரப்படும் செலவுத் தொகையை மீண்டும் கணக்கிடலாம்.

5. செலுத்தப்படாமல் உள்ள பாக்கித் தொகைக்கு கூடுதல் வட்டி இன்றி, நிலுவைத் தொகை வகையில் ஒரு தவணையோடு, நடப்பு ஆண்டுத் தொகையைச் செலுத்துவதன்மூலம், கடன் பாக்கியைக் கொடுத்துத் தீர்க்க உள்ளாட்சி மன்றங்கள் அனுமதிக்கப்படலாம்.

**2.8.8.** அகவிலைப்படி வழங்குவது போன்ற அரசின் கொள்கை முடிவின் காரணமாக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்பட்ட சில செலவுகளை ஈடுசெய்யும் வகையில் அரசு வழங்க உறுதியளித்த "அகவிலைப்படி மானியம்" பல ஆண்டுகளாக உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படவில்லை என்பது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. (இது, அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படியை வழங்குவது குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவை ஈடுகட்டுவதற்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்க உறுதி அளிக்கப்பட்ட தொகையாகும்) நகராட்சி நிருவாக இயக்குநர் அரசுக்கு எழுதிய 1.2.95 ஆம் நாளிட்ட தன்னுடைய கடிதத்தில் 31.3.95 ஆம் நாள் வரையில், இவ்வகையில் பாக்கியாக உள்ள தொகை ரூ.45 கோடி என மதிப்பீடு செய்துள்ளார். இது போலவே, பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கும் அத்தகைய தொகைகள் பல ஆண்டுகளாக செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளன

என்றும் கூறப்படுகிறது. பாக்கித் தொகையின் அளவுபற்றிய விவரங்கள் தற்போது ஆணையத்திடம் இல்லை. அரசால் அளிக்கப்பட வேண்டிய இது போன்ற பாக்கித் தொகைகள், அனுமதிக்கப்பட்டு, உள்ளாட்சி மன்றங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகை வகையில் சரிக்கட்டப்படலாம் என மாநில நிதி ஆணையம் பரிந்துரைக்கிறது.

**2.8.9.** இது போலவே, விற்பனை வரி மீதான மேல் வரி உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ்மேல் வரி, சுரங்கங்கள், கனிமங்களிலிருந்து கிடைக்கம் வருவாய் ஆகிய வகையில், உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்க வேண்டிய வருவாய்ப பங்குத் தொகைகள் பல ஆண்டுகளாக சரிக்கட்டப்படாமலேயே உள்ளன என்று மாநில நிதி ஆணையம் அறிந்து, இதுபற்றி முந்தைய பிரிவுகளிலும் குறிப்பிட்டுள்ளது. வழங்கப்படாமலுள்ள தொகை, அரசுக் கணக்குகளில் சேர்ந்து வந்துள்ளன. இத்தொகைகளும் அரசால் அனுமதிக்கப்பட்டு இயன்ற வரையில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கெதிராக சரிக்கட்டப்படலாம் என மாநில நிதி ஆணையம் பரிந்துரைக்கிறது.

**2.8.10.** அரசு சிறப்புக் கட்டளைகளைப் பிறப்பிப்பதன் மூலம், வருங்காலத்தில் அனைத்து வருவாய்களும் உரிய நேரத்தில் சரிகட்டப்படுவதை அரசு உறுதி செய்தால், நடப்பு ஆண்டுத் தொகையுடன், காலங்கடந்த பாக்கி வகையில் ஒரு தவணையையும் கட்டாயமாகச் செலுத்த வேண்டும் என உள்ளாட்சி மன்றங்களை வற்புறுத்தலாம்.

**2.8.11.** 1975–76, 1980–81, 1985–86 ஆம் ஆண்டுகளில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை செய்ய வேண்டிய திருத்தங்களை ஒத்தி வைத்ததாலும், உள்ளாட்சி மன்றங்கள் செய்ய வேண்டிய திருத்தத்திற்குரிய உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டதாலும், சொத்து வரி நிருவாகத்தில் ஏற்பட்ட இழப்பிற்கு, ஈட்டுத்தொகை செலுத்துவதன் அவசியத்தை நகராட்சி நிருவாக இயக்ககம் வலியுறுத்தியுள்ளது. வரி விதிப்பு அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த, இயலாத அளவுக்கு உள்ளாட்சி மன்றங்களின் கைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. நகராட்சிகளில் மூன்று முறைப் பொதுச் சீராய்வு செய்ய முடியாததால், ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்ட இழப்புத் தொகை ரூ.81/- கோடியாகும். இதோடு கூட, அரசுக் கொள்கை காரணமாக, சொத்து வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடங்களிலிருந்து வர வேண்டிய தொகை வகையில் ஏற்பட்டுள்ள இழப்பு ரூ.19.76 கோடி என நகராட்சி நிருவாக இயக்ககம் தெரிவித்துள்ளது. ஏனைய உள்ளாட்சி மன்றங்களிலும் இதே நிலை நிலவுகின்றது. பள்ளிக் கட்டிடங்களுக்கு சலுகை அளித்ததன் காரணமாக, ஆண்டொன்றுக்கு நகராட்சிகளில் ரூ.5/- கோடியும் மாநகராட்சிகளில் ரூ.1.25 கோடியும் பேரூராட்சிகளில் சுமார் ரூ.1/- கோடியும் வருவாய் இழப்பு ஏற்பட்டது.

**2.8.12.** இது வரையில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய விதித்துறை இல்லை என்று மாநில நிதி ஆணையம் கருதுகிறது. உள்ளாட்சி மன்றங்களின் வரி விதிப்பு அதிகாரங்களில் அரசு தலையிட்டால் அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேர வேண்டிய ஏதேனுமொரு வரி விதிப்பிற்கு விலக்களிக்க அனுமதித்தால் உள்ளாட்சி மன்றங்களுக்கு இதனால் ஏற்படும் இழப்புத் தொகையை அரசு ஈடு செய்ய வேண்டும் என்று மாநில நிதி ஆணையம் ஏற்கெனவே ஒரு நிலைப்பாடு எடுத்துள்ளது. உள்ளாட்சி மன்றங்களின் கடன் பொறுப்பைக் குறைப்பது பற்றி அல்லது அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு வர வேண்டிய பாக்கித் தொகைகளை சரிக்கட்டிய பின்னர், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைகளைத் தகுந்த முறையில் திருத்தியமைப்பது பற்றியும் அபராத வட்டியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வது உட்பட வட்டியில் கழிவு அளிப்பது பற்றியும் அரசு பரிசீலிக்கலாம் என்று மாநில நிதி ஆணையம் இங்கு குறிப்பிட விழைகிறது.

**2.8.13.** ஆதாயந்தரத்தக்க திட்டங்களுக்காக ஏற்பட்ட கடன்களின் நேர்வுகளில், உள்ளாட்சி மன்றங்கள் தங்களுடைய கடன் பொறுப்பைத் தீர்ப்பதற்கு ஏதுவாக முந்தைய பிரிவுகளில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டுள்ளபடி அங்காடி நிலவரத்திற்கேற்ப, பொருத்தமான வாடகை/குத்தகைத் தொகைகளை நிர்ணயித்துக்கொள்ள அவற்றுக்கு உரிமை அளிக்கலாம்.

**2.8.14.** இந்த இனங்கள் வகையிலான தற்போதைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதலாகத் தவணைகள் அளித்து கடனைத் திருப்பிச் செலுத்தும் கால அளவைத் திருத்தியமைக்கலாம்.

**2.8.15.** உள்ளாட்சி மன்றங்களின் திட்டங்களைச் செயல்படுத்தும் தொழில்நுட்ப முகவரமைப்புகள் பணிகளை முடிப்பதற்கான கால அளவை வரையறுப்பதன் மூலம் திட்டச் செலவு உயர்வை முகவரமைப்புகள் பங்கிட்டுக் கொள்வதற்கு அரசு பொறுப்பு நிர்ணயிக்க வேண்டும் குறிப்பிட்ட கால அளவிற்குள் பணிகள் முடிக்கப்படவில்லையென்றால், தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

ஏனைய பொறுப்புகள்:

**2.8.16.** உள்ளாட்சி மன்றங்களுக்கு இரு தலைப்புகளின் கீழ், அதாவது (1) ஓய்வூதியங்கள்இ ஓய்வூதிய பங்குத் தொகை வழங்குவது (2) தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, ஆனால், அரசுக் கணக்குகளில் வகைப்பாடு செய்யப்படாத வருங்கால வைப்பு நிதி பங்குத் தொகைகளைச் செலுத்துதல் என இரு பெரும் பொறுப்புகள் உள்ளன.

ஓய்வூதியம் தொடர்பான பொறுப்பு:

**2.8.17.** அரசுப் பணியாளர்களுக்கு உரிய அனைத்து ஓய்வூதியப் பயன்களும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களும் பெறத் தகுதியுடையவராவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இச்செயல் நோக்கத்திற்காக, அரசு, தனி நிதி ஒன்றை ஏற்படுத்தி இந்நிதியை உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆய்வாளர் (தற்போது, உள்ளாட்சி நிதிக் கணக்கு இயக்குநர்) நிருவகித்து வருகிறார். ஆண்டொன்றுக்கு, பணியாளர்கள் பெறும் உயரளவு சம்பள வீதத்தில் 8.33 சதவீதத் தொகையை ஓய்வூதியப் பங்குத் தொகையாக செலுத்த வேண்டுமென உள்ளாட்சி மன்றங்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. இது பின்னர், 10 சதவீதமாக உயர்த்தப்பட்டு, முடிவில் 20 சதவீதமாக (1993ஆம் ஆண்டில்) அதிகரிக்கப்பட்டது. ஆண்டுப் பங்குத் தொகையாக, உள்ளாட்சி மன்றங்கள் இந்நிதிக்கு சுமார் 6/- கோடி ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது என்று உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநர் தெரிவித்துள்ளார். ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம், ஓய்வூதியதாரர்களுக்கு அதிகரிக்கப்பட்ட அகவிலைப்படி, அளிக்கப்படும் பணிக்கொடை ஆகிய வகையில், ஒவ்வோராண்டும் இந்நிதியிலிருந்து மொத்தம் சுமார் ரூ.19 கோடி செலவாகிறது. இதன் விவரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 2.67. ஓய்வூதியப் பங்குத் தொகை கோரிக்கையும் ஓய்வூதியம் ஏனைய பயன்கள் வழங்குவது குறித்த பொறுப்பும் (1995–96–ல் உள்ளவாறு)

| | உள்ளாட்சி மன்றத்தின் பெயர் | 1995–96 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியப் பங்குத் தொகை | ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக ஏற்பட்ட செலவு | பற்றாக்குறை அளவு |
|---|---|---|---|---|
| | | (ரூ.கோடியில் ) | | |
| 1. | நகராட்சிகள் | 2.30 | 6.71 | 4.41 |
| 2. | ஊராட்சி ஒன்றியங்கள் | 2.29 | 8.31 | 6.02 |
| 3. | பேரூராட்சிகள் | 1.72 | 4.81 | 3.09 |
| | மொத்தம் | 6.31 | 19.83 | 13.52 |

**2.8.18.** பல உள்ளாட்சி மன்றங்கள் நிதி வசதியில்லாததால், ரூ.6 கோடி பங்குத் தொகையைக்கூட முறையாகச் செலுத்துவதில்லை. 31.3.94 அன்றுள்ளபடி இது தொடர்பாக உள்ளாட்சி மன்றங்களிடம் நிலுவையாகவுள்ள தொகை குறித்த விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. (தமிழ்நாடு உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டவை)

அட்டவணை 2.68 உள்ளாட்சி மன்றங்கள் செலுத்தத்தக்க ஓய்வூதியம் பங்குத் தொகை

| உள்ளாட்சி மன்றங்கள் | ஓய்வூதிய நிலுவைத் தொகைகள் (உள்ளாட்சி மன்றங்கள் செலுத்தத்தக்கவை) (நிலுவையாக உள்ளது) | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு செலுத்தத் தக்கப் பங்குத்தொகை | அரசுக்குத் தரவேண்டிய பங்குத்தொகை (நிலுவையாக உள்ளது) | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மாநகராட்சிகள் | 1.53 | 1.28 | –– | 2.81 |
| நகராட்சிகள் | 96.78 | 28.07 | 41.23 | 166.08 |
| பேரூராட்சிகள் | 45.07 | 176.14 | 1.20 | 222.4 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | – | 262.87 | 35.55 | 298.42 |
| மொத்தம் | 143.38 | 468.36 | 77.98 | 689.72 |

**2.8.19.** 31.3.94 அன்றுள்ளபடி, ஓய்வூதிய பங்குத் தொகை வகையில் உள்ளாட்சி மன்றங்கள், உள்ளாட்சி நிதித்துறைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4.68 கோடியாகும். நகராட்சிகளும் பேரூராட்சிகளும் அரசுக்குச் செலுத்தத் தக்க நிலுவைகளை விற்பனை வரி மீதான மேல் வரியிலிருந்தும் தொழில் வரி நிலுவைத் தொகைகளிலிருந்தும் ‘B’ ‘C’ ‘D’ தொகுதிகளைச் சேர்ந்த பணியாளர்கள் சார்பில் அரசு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளிலிருந்தும் அரசு சரிக்கட்டிவிட்டது.

**2.8.20.** ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த வருவாய்களிலிருந்து சரிக்கட்டியும் இதற்காக ஏற்படுத்தப்பட்ட பொது நிதியிலிருந்து குறைந்தளவு தொகைகளை எடுத்த பிறகுங்கூட உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்குச் சேர வேண்டிய ஓய்வூதிய தொகைகள் முழுவதையும் கொடுத்துத் தீர்க்க

இயலவில்லை என்றும், அரசு அளித்துள்ள அகவிலைப்படி உயர்வும் மற்றும் ஏனைய பயன்கள் இன்னும் சில உள்ளாட்சி மன்றங்களில் வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளதாகவும் உள்ளாட்சி நிதிக்கணக்குகள் இயக்குநர், மாநில நிதி ஆணையத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளார். தற்போதைய நிலையில் ஒய்வூதியப் பங்குத் தொகைகள் முழுவதையும் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலித்தாலும் கூட ஓராண்டிற்கு சுமார் ரூ.12 கோடி முதல் ரூ.13 கோடி துண்டு விழும் என்றும், அகவிலைப்படி உயர்வு காரணமாகவும் ஊதியக் குழுவின் பரிந்துறைகளைச் செயல்படுத்தும் போதெல்லாம், ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படுவதன் விளைவாக சேர்ந்து வரக்கூடிய ஏனைய கூடுதல் ஓய்வூதிய பயன்கள் காரணமாகவும் ஆண்டுக்காண்டு இது அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**2.8.21.** வசூலிக்கப்படும் பங்குத் தொகைக்கும் உண்மையில் வழங்கப்படும் ஓய்வூதிய தொகைக்கும் இடையிலான துண்டு விழும் தொகையைச் செலுத்துவது யார் என்பதுதான் முக்கிய பிரச்சினையாக உள்ளது. உள்ளாட்சி மன்றங்கள், 20 சதவீதப் பங்குத் தொகையைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளதால், மீதியுள்ள தொகையையும் செலுத்துமாறு அவற்றைக் கேட்பது சரி எனத் தோன்றவில்லை. இது உள்ளாட்சி மன்றங்களே மொத்த ஓய்வூதிய தொகையையும் செலுத்துவது போலாகிவிடும். ஒய்வூதிய திட்டம் கொண்டுவரப்பட்டபோது இது எதிர்பார்க்கப்படவில்லை. உள்ளாட்சி மன்றங்கள், பணியாளர்களுக்குச் சம்பளமும், ஓய்வூதிய பங்குத் தொகையும் கொடுக்க இயலாமல் சிரமப்படும்போது இது நடைமுறை சாத்தியமாகாது. உண்மையில், உயர்த்தப்பட்ட அகவிலைப்படி மற்றும் மாற்றியமைக்கப்பட்ட சம்பளத்தொகைகளை வழங்க தங்கள் சொந்த நிதி ஆராரங்களிலிருந்து கூடுதல் நிதி திரட்டக் கூட மிகவும் அவை சிரமப்படுகின்றன.

**2.8.22.** இச்சூழ்நிலையில் அரசு மட்டுமே இப்பொறுப்பினை ஏற்க வேண்டும் பற்றாக்குறையை நிறைவு செய்ய அரசு அவ்வப்போது தொகை வழங்கினாலன்றி மற்றபடி, இச்செயல்நோக்கத்திற்காகத் தனியாக நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, உள்ளாட்சி நிதிக் கணக்குகள் தணிக்கைத் துறை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டாலும், அது நீண்ட நாள் செயல்பட முடியாது. இதற்கு மாறாக, உள்ளாட்சி மன்றங்கள் செலுத்த வேண்டிய பங்குத்தொகைகளை, அரசு அளிக்க வேண்டிய தொகைகளில் சரிக்கட்டியோ அல்லது அரசுக் கணக்கில் கட்டாயமாக செலுத்தம்படியோ செய்யலாம்; ஓய்வூதியத் தொகைகள் முழுவதையும் கருவூலங்கள் மூலம் நேரடியாக அரசே வழங்கலாம்.

**2.8.23.** உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்களை அனுமதிக்கும் அதிகாரியாக, உள்ளாட்சி நிதிக்கணக்குகள் தணிக்கைத் துறை இயக்குநரே தொடர்ந்து இருக்கலாம். கூடுதல் பணியார்கள் அமர்த்தப்படாமல் இப்பணியை மாநிலக் கணக்குத் துறைத்தலைவருக்கு மாற்றுவதை அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார். உள்ளாட்சி மன்றங்களின் ஓய்வு பெற்ற பணியாளர்கள், மாதாந்திர ஓய்வூதியத்தைப் பெறுவதில் நிச்சயமற்ற நிலை தொடரக்கூடாது என்று மாநில நிதி ஆணையம் கருதுகிறது. ஒரு சமூக நோக்கில், அரசுப் பணியாளர்களக்கு இணையாக உள்ளாட்சி மன்றப்பணியாளர்களுக்கும் அரசு ஓய்வூதியப் பயன்களை நீட்டித்துள்ளதால், இது தொடர்பாக உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு கை கொடுத்து உதவுவதுதான் நியாயம்.

**2.8.24.** எனவே, உள்ளாட்சி மன்றப் பணியார்களுக்குரிய ஓய்வூதியப் பயன்களை அளிப்பதில் ஏற்படுகிற பற்றாக்குறையை, அரசே ஈடு செய்ய வேண்டும் என்று மாநில நிதி ஆணையம் பரிந்துரை செய்கிறது.

**வருங்கால வைப்புநிதி:**

**2.8.25.** உள்ளாட்சி மன்றப்பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். இந்நிதியை உள்ளாட்சிமன்றங்களே நிருவகிக்கின்றன. உள்ளாட்சி மன்றங்கள், பணியாளர்களின் சம்பளத்திலிருந்து தொகைகளைப் பிடித்தம் செய்கின்றன; ஆனால் அவ்வாறு பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளை அரசின் வைப்பீட்டுக் கணக்கில் செலுத்துவதில்லை. வருங்கால வைப்பு நிதி வைப்பீடுகள் மூலம் கிடைக்கும் வட்டி, பணியார்களுக்கு வட்டி கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும். நிதிப்பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான உள்ளாட்சி மன்றங்கள் சம்பளப்பட்டிகளைத் தயாரிக்கும்போது, அவற்றில் வருங்கால வைப்பு நிதிக்கான பிடித்த விவரங்களைக் காட்டுகின்றன; ஆனால் அவ்வாறு பிடித்தத் தொகையைச் செலுத்துவதில்லை. பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குத்தேவையான நிகரத் தொகை மட்டுமே பெறப்பட்டு, பிடித்தத் தொகைகள், சம்பந்தப்பட்ட வைப்பீட்டுக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன. "வைப்பீடுகள்" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் கருவூலத்தில் அரசு கணக்கில் இவை செலுத்தப்படவேண்டும் எனபதுதான் நடைமுறை. இந்த வைப்பீடுகள் மீது சேர்ந்துவரும் வட்டி, சாதாரணமாக, பங்குத்தொகைகள் மீதான வட்டிப்பொறுப்பை நிறைவு செய்ய போதுமானதல்ல. 31.3.94அன்றுள்ளபடி உள்ளாட்சி மன்றங்கள் செலுத்தாத வருங்கால வைப்புத் தொகை ரூ.15.06 கோடி (மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவை அனைத்தும் சேர்ந்து) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.69. வைப்பீடு செய்யப்படாமலுள்ள வருங்கால வைப்பு நிதித்தொகை**

| | செலுத்தப்படாத வருங்கால வைப்பு நிதி | வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டிய, ஆனால் அவ்வாறு சேர்க்கப்படாத ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரை அடிப்படையிலான நிலுவைத் தொகைகள் |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| மாநகராட்சிகள் | 622.59 | 444.23 |
| நகராட்சிகள் | 691.68 | 462.79 |
| பேரூராட்சிகள் | 191.63 | 80.78 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | n.a | n.a |
| மொத்தம் | 1505.90 | 987.80 |

**2.8.26.** மேலும் பணியாளர்களின் வருங்கால வைப்புநிதிக் கணக்கில் சேர்க்கப்படுமாறு உத்தரவிடப்பட, ஐந்தாவது ஊழியக்குழுவின் பரிந்துரைகள் அடிப்படையிலான நிலுவைத்தொகைகளை இந்த உள்ளாட்சி மன்றங்கள், பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்கணக்கில் சரிக்கட்டவில்லை; 31.3.94 அன்றுள்ளபடி இந்த மூன்று உள்ளாட்சி மன்றங்களில் நிலுவையாக உள்ள தொகை ரூ.9.88 கோடி ஆகும்.

**2.8.27.** வருங்கால வைப்பு நிதி வைப்பீடுகளிலிருந்து வருமானம் எதுவும் இல்லாததால், வட்டி வகையில் சந்தாதாரர்களுக்கு உள்ளாட்சி மன்ற நிதிகளிலிருந்து வழங்கத் தக்க தொகை, கணிசமான அளவுக்கு இருக்கும். இறுதியாக, உள்ளாட்சி மன்றப் பணியாளர் ஒருவர், பதவியிலிருந்து ஓய்வு பெறும்போது அவர் கணக்கிலுள்ள வருங்கால வைப்பு நிதித் தொகையைத் திரும்பப் பெறுவதில் அவருக்கு சிரமம் ஏற்படும்.

**2.8.28.** அரசுப் பணியாளர்களின் நேர்வில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் நிர்வகிப்பதைப் போலவே, உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் நேர்வில், வருங்கால வைப்பு நிதிக் கணக்கு நிருவாகத்தை உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டிலிருந்து முழுவதுமாக எடுத்து, மையப்படுத்தலாம் என்று மாநில நிதி ஆணையம் பரிந்துரைக்கிறது. இப்பொறுப்பினை, மாநிலக் கணக்குத் துறைத்தலைவருக்கு இணையாக உள்ளாட்சி நிதிக் கணக்குகள் துறை இயக்குநரிடம் ஒப்படைக்கலாம். உள்ளாட்சி மன்றங்கள் பிடித்தம் செய்த, மொத்த வருங்கால வைப்பு நிதித்தொகையை ஆறு மாதங்களுக்கொருமுறையாவது கணக்கிட்டு, அத்தொகையை சம்பந்தப்பட்ட அதிகார மன்றத்திடம் செலுத்துமாறு கட்டாயப்படுத்தப் படலாம். அவசியமாயின், தொகை செலுத்தத் தவறிய உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், அரசு வழங்கும் நிதியுதவியிலிருந்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு அளிக்க வேண்டிய உதவித்தொகையைப் பிடித்துக் கட்டலாம்.

**2.8.29.** இவ்வாறு ஏதேனும் கண்டிப்பான நடவடிக்கை எடுத்தாலன்றி, உள்ளாட்சி மன்றங்கள், வருங்கால வைப்பு நிதித் தொகைகளை தாங்களே பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்க முடியாது. நீண்டகாலம் பணிபுரிந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு இது சிரமத்தை ஏற்படுத்தும்.

**2.8.30.** பரிந்துரைகள்

1. தவணைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கெடுவைத் திருத்தியமைக்கலாம்.

2. கீழ் நிலைகளைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு, வட்டி வீதத்தை அரசு குறைக்கலாம்.

3. உள்ளாட்சி மன்றங்களுக்கு குறைவான நிதி ஆதாரங்களே இருப்பதையும் வேண்டுமென்றே தொகை செலுத்தாமல் இருக்கவில்லை என்பதையும் கருத்திற் கொண்டு, அபராத வட்டி தொடர்பான விதியை வலியுறுத்தாமல் இருக்கலாம்.

4. கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களைப் பொறுத்தவரை பராமரிப்புச் செலவில் சேர்க்கப்பட்டுள்ள அதிக அளவிலான நிர்வாகச் செலவைத் தவிர்க்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கோரப்படும் செலவுத் தொகையை மீண்டும் கணக்கிடலாம்.
5. செலுத்தப்படாமல் உள்ள பாக்கித் தொகைக்கு கூடுதல் வட்டி இன்றி, நிலுவைத் தொகை வகையில் ஒரு தவணையோடு, நடப்பு ஆண்டுத் தொகையைச் செலுத்துவதன்மூலம், கடன் பாக்கியைக் கொடுத்துத் தீர்க்க உள்ளாட்சி மன்றங்கள் அனுமதிக்கப்படலாம்.

6. அகவிலைப்படி வழங்குவது போன்று உள்ளாட்சி மன்றங்கள் செய்த சில செலவுகளை, அரசு ஈடுசெய்ய ஒப்புக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஈட்டுத் தொகை, பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் உள்ளது. அகவிலைப்படி மானிய நிலுவைத் தொகைகளை அரசு அனுமதித்து, உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வர வேண்டிய கடன்களுக்காக சரிக்கட்டிக் கொள்ளலாம்.

7. விற்பனை வரி மீதான மேல்வரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி, சுரங்கங்கள் கனிமங்கள் ஆகிய வகையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு சேரவேண்டிய வருவாய் பங்கு ஒதுக்கீட்டுத் தொகை, பல ஆண்டுகளாக சரிக்கட்டப்படாமல் அரசுக் கணக்கில் சேர்ந்து கொண்டே இருக்கின்றன என மாநில நிதி ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மேற்சொன்ன தொகைகளையும் அனுமதித்து இயன்ற இடங்களிலெல்லாம், உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வரவேண்டிய கடன் பாக்கிகளுக்காக சரிக்கட்டிக் கொள்ளலாம்.

8. வருங்காலத்தில் அனைத்து வருவாய்களும் உரிய காலத்தில் சரிக்கட்டப்படுவதை அரசு உறுதி செய்தால் நடப்பு ஆண்டுத் தொகையுடன், காலங்கடந்த பாக்கி வகையில் ஒரு தவணையையும் கட்டாயமாகச் செலுத்த வேண்டும் என வற்புறுத்தலாம்.

9. உள்ளாட்சி மன்றங்களின் கடன் பொறுப்பைக் குறைப்பதற்காக அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகைகளை சரிக் கட்டிய பின்னர், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைகளைத் தகுந்த முறையில் திருத்தியமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கலாம். அபராத வட்டியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வது உட்பட வட்டியில் கழிவும் அளிக்கலாம்.

10. ஆதாய நோக்கிலான திட்டங்களைப் பொறுத்தவரை, உள்ளாட்சி மன்றங்கள், தங்களுடைய கடன் பொறுப்பைத் தீர்ப்பதற்கு ஏதுவாக, அங்காடி நிலவரத்திற்கேற்ப, பொருத்தமான வாடகை, குத்தகைத் தொகைகளை நிர்ணயித்துக்கொள்ள அவற்றுக்கு உரிமை அளிக்கலாம்.

11. திட்டங்களைச் செயல்படுத்த, வரையறுத்த கால அளவுக்கும் மேலாக அவகாசம் எடுத்துக் கொள்வதன் காரணமாக திட்டச் செலவு உயர்வதற்கு, உள்ளாட்சி மன்றங்களின் திட்டங்களைச் செயற்படுத்தும் தொழில் நுட்ப முகவரமைப்புகள் மீதும் கூட்டுப் பொறுப்பு நிர்ணயிக்கலாம். வரையறுத்த அளவுக்கும் அதிகமாக அவகாசம் பிடித்த நேர்வுகளில், தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

### 2.8.31. ஓய்யூதியப் பங்குத்தொகை மற்றும் ஒய்வூதியம் வழங்குவது தொடர்பான பொறுப்பு

(i) ஒய்வூதிய பங்குத் தொகைகளுக்கும் உண்மையில் வழங்கப்படும் ஒய்வூதியத் தொகைகளுக்கும் இடையே தொடர்ந்து இடைவெளி இருந்து வருகிறது. உள்ளாட்சி மன்றங்கள், ஏற்கெனவே 20 விழுக்காடு ஒய்வூதியப் பங்குத் தொகை செலுத்தி வருகின்றன. எனவே, ஒய்வூதியத் தொகைகள் வகையிலான மொத்த பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென, திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, எதிர்பார்க்கப்படவில்லை. நடைமுறையில் இது சாத்தியமும் அல்ல. ஏனெனில், உள்ளாட்சி மன்றங்கள், மாதாந்திரச் சம்பளத் தொகையையும், ஒய்வூதியப் பங்குத் தொகையையுமே கூட செலுத்த முடியாத நிலையில் உள்ளன.

(ii) ஆகவே அரசு இப்பொறுப்பை ஏற்கலாம்.

(iii) தனியாக ஏற்படுத்தப்பட்டு தற்போது உள்ளாட்சி நிதிக் கணக்குகள் – தணிக்கைத் துறை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வரும் நிதி, தனித்து இயங்கக் கூடியதாக இல்லை. பற்றாக்குறையை ஈடுகட்ட அவ்வப்போது இந்நிதிக்கு அரசு தொகை அளிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு மாறாக, உள்ளாட்சி மன்றங்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகைகளை அரசு அளிக்க வேண்டிய தொகைகளில் சரிக்கட்டியோ அல்லது கட்டாயமாக வசூல் செய்தோ அரசுக் கணக்கில் செலுத்தும்படி செய்யலாம். ஓய்வூதியத் தொகை வகையில் உள்ளாட்சி மன்றங்கள் அளிக்கும் தொகை முழுவதையும் அரசே ஏற்றுக் கொண்டு உள்ளாட்சி மன்ற ஓய்வூதியதாரர்களுக்கு கருவூலங்கள் மூலமாக நேரடியாக ஓய்வூதியம் வழங்கலாம்.

(iv) உள்ளாட்சி நிதிக் கணக்குகள் தணிக்கைத் துறை இயக்குனரே, ஓய்வூதியப் பயன்களை அனுமதிக்கும் அதிகாரியாகத் தொடர்ந்து இருக்கலாம்.

**வருங்கால வைப்பு நிதி**

**2..8.32.** பரிந்துரைச் சுருக்கம்

அனைத்து உள்ளாட்சி மன்றங்களும், வருங்கால வைப்பு நிதி வசூல் தொகைகளை எதிலும் முதலீடு செய்யாமல், முழுவதையும் தாங்களே பயன்படுத்திக் கொள்வதால் வருங்கால வைப்புநிதியின் நிர்வாகத்தை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்து விடலாம். இதை மையப்படுத்தி, உள்ளாட்சி மன்றங்கள் பிடித்தம் செய்யும் வருங்கால வைப்புநிதித் தொகை, முழுவதையும் ஆறுமாதத்திற்கு ஒருமுறை கணக்கிட்டு, சம்பந்தப்பட்ட அதிகார மன்றத்தில் கட்டாயமாக செலுத்தும்படி செய்யலாம். பிடிமானத் தொகையைச் செலுத்தத் தவறும் உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு அளிக்க வேண்டிய உதவித் தொகையில் அத்தொகை சரிக்கட்டப்படலாம். இவ்வாறு ஏதேனும் கண்டிப்பான நடவடிக்கை எடுத்தாலன்றி, வருங்கால வைப்பு நிதி சேர்மானத் தொகைகளை உள்ளாட்சி மன்றங்கள் தாங்களே பயன்படுத்திக்கொள்வதைத் தடுக்க முடியாது.